வ.ஐ.ச.
ஜெயபாலன்



மூன்றாவது மனிதன் வெளியீடு

# உயிர்த்தெழுகிற கவிதை

"மூன்றாவது மனிதன்" வெளியீடு - 4

# உயிர்த்தெழுகிற கவிதை

(கவிதைத் தொகுப்பு)

வ.ஐ.ச. ஜெயபாலன்

| | | |
|---|---|---|
| **Title** | - | "UHERTHEZUKIRA KAVITHAI"<br>(A Collection Poems) |
| **Author** | - | V.I.S. Jayapalan |
| **Puplished by** | - | Mounravathu Manithan<br>Publication (c)<br>No. 27, A.V.V. Road,<br>Akkaraipattu - 02 (32400)<br>Sri Lanka. |
| **Cover by** | - | A.M. Razmy |
| **Printed By** | - | IPC, Akkaraipattu. |
| **Price** | - | Rs. 80/= |
| **First Edition** | - | 24, February 1998 |

எனது வாழ்வின்
கண்களும் கவிதைகளுமான
**ஆதித்தனுக்கும் இளவேனிலுக்கும்**
சோலையும் பாலையுமான
**வாசுகிக்கும்**

நன்றி .....

சரிநிகர்
இந்தியா டுடே
குமுதம்
சுபமங்களா
நந்தலாலா
அகதி
"தேடல்" பதிப்பகம்
ENNEL FASTER COMPUTER SERVICE
ஏ.நிஸ்தார்
அன்ரனி ஜெகநாதன்
சேகு தாவூத் பஷீர்

அனைவருக்கும் .....

அணைகளை உடைத்துக் கொண்டு பேய் ஆறாய் ஓடும் பெருவெள்ளத்தினிடையே இன்னும், இன்றும் உயிர்ப்பின் அர்த்தத்தோடு- இயற்கையின் வனப்போடு- பனித்துளி போர்த்திய அழகோடு- நம்மிடையே ஒரு "ஜெயபாலன்" வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

அடக்கப்பட்ட மக்களின் துன்பம் நிறைந்த கண்ணீர் ஆற்றில் மனிதாபிமானத்தின் துடுப்போடு, தனது எழுத்துப்படகில் உலகெலாம் சுற்றி வரும் வ.ஐ.ச. ஜெயபாலன்- இலங்கை இனத்துவ அரசியல் ஒடுக்கு முறை வரலாற்றில், இனத்துவ மேலாதிக்கத்துக்கெதிராக எழுதியும் வாழ்ந்தும் வரும் படைப்பாளிகளுள் குறிப்பிடத்தக்கவர்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பின்னான காலகட்டங் களில் வடக்கு கிழக்கில் வெடித்தெழும்பிய தமிழ் முஸ்லிம் இன முரண்பாடுகளால் நெஞ்சம் உருகி, சதா கண்ணீர் வடித்துக் கொண்டி ருக்கும் ஒரு கலைஞன்- ஜெயபாலன்.

தமிழ் முஸ்லிம் மக்களின் சமத்துவமான, ஐக்கியப்பட்ட வாழ்வே தனது ஆன்மாவின் மூச்சென உரத்துக் குரல் எழுப்பும் ஜெயபாலன், அதற்கான பணியில், அதற்கான வழியில் என்றும் திசை மாறாது நெஞ்சில் துயரோடும் காலில் முட்களோடும் முதுகில் சுமைகளோடும் குன்றும் குழியுமான பாதையில் பயணப்படும் இன்றைய, நாளைய வாழ்வின் நம்பிக்கையை சுமந்த உண்மை மனிதனின் பிரதிநிதி.

ஜெயபாலனின் "உயிர்த்தெழுகிற கவிதை" தொகுப்பை "மூன்றாவது மனிதன்" வெளியீட்டகத்தின் நான்காவது வெளியீடாக வெளியிடுவதில் எனது பணி பெருமை கொள்கிறது.

அவசியமானதும் காலத்தின் தேவையானதுமானை ஒரு கடமையைச் செய்த திருப்தியை நான் அடைகிறேன்.

எம். பௌசர்
பதிப்பாளர்.

எனது கவிதைகள்
எனது கனவுகளாக மட்டுமல்ல,
எனது முயற்சிகளாகவும் போராட்டங்களாகவும்
எனது வாழ்வாகவும், வாழ்வின் அர்த்தங்களாகவும் .........

---

நான் மகிழ்ச்சியும் நம்பிக்கைகளும் நிறைந்த மனிதன். என்னையே தளர வைக்கிறது காலத்தின் பெருந்துயர்கள். மணல் தைத்த சிப்பியின் துயரம் முத்தாகிறது போல எனது துயர்கள் கனவுகளாகவும் கவிதைகளாகவும் விளைகிற காலமிது. இது பற்றி இன்னும் கொஞ்சம் அதிகமாகவே உங்களுக்குச் சொல்லலாம்.

அடையா நெடுங்கதவும் அஞ்சல் எனும் சொல்லுமுடைய கோயம்புத்தூரில்தான் நான் ஒரு முக்கிய கவிஞனாக இனம் காணப்பட்டேன். தமிழருக்கு எதிரான இலங்கை அரசின் பயங்கரவாதத்திற்கு அஞ்சி அகதியாக வெளியேறிய போது வருக என அரவணைத்த தமிழகம்தான் எனது இரண்டாவது தாயகம். கோவை எனக்கு இரண்டாவது சொந்த ஊர் போல.

எழுச்சி மிக்க தொழிலாளர் விவசாயிகளது ஊர்வலங்களில் நிறைகிற கொடிகளாலும் பதாகைகளாலும் மட்டுமே என்றும் சிவந்திருக்கிற வரலாற்று பெருமை மிக்க எனது கோவை இந்து இஸ்லாமிய தமிழர்களது இரத்தத்தால் சிவந்திட ஒரு கொடிய விதி நேர்ந்ததே என எனது ஆவி துடிக்கிறது.

எல்லை தாண்டி வர்த்தக நிலையங்களுக்குள் புகுந்த நச்சுப்பாம்புகளை அடித்து விரட்டாமல் பாதுகாப்பாக இருக்கட்டுமே என்று கோவில்களிலும் மசூதிகளிலும் வைத்து பாலூற்றியதால் நேர்ந்த பயங்கரம்தான் இது. எனினும் எனது கோவை சாம்பரிலிருந்து முன்னை விட ஆற்றலுடன் உயிர்த்தெழுவாள் என்பதை நான் அறிவேன்.

எனது முதல் கவிதைத் தொகுதி 1986ல் யமுனாராஜேந்திரன், ஈழமடங்கன், கவிஞர் புவியரசு முதலிய கோயம்புத்தூர் நண்பர்களால் வெளியிடப்பட்டது: தொடர்ந்து எனது இரண்டு தொகுதிகள் தமிழகத்திலும் ஒரு தொகுதி கனடாவிலும் வெளியிடப்பட்ட போதிலும் நண்பர் எம். பௌசரின் முயற்சியினால் வெளிவருகின்ற "உயிர்த்தெழு கிற கவிதை" என்ற இந்த தொகுதியே ஈழத்தில் வெளிவரும் எனது முதலாவது தொகுதியாகும்.

இக்கவிதைத் தொகுதிக்கு இன்னொரு முக்கியத்துவமும் இருக்கிறது. 1983ல் "தேசிய இனப்பிரச்சினையும் முஸ்லிம் மக்களும்" என்ற எனது முதலாவது ஆய்வு நூல் வெளிவந்த நாட்களில் இருந்தே ஒரு தவமாக நான் மேற்கொண்டு வருகிற தமிழ் முஸ்லிம் மக்களது ஐக்கியமும் மேம்பாடும் விடுதலையும் தொடர்பான எனது முயற்சிகளிலிருந்து முகிழ்த்த பல கவிதைகளை இத்தொகுதி உள்ளடக்கியிருக்கிறது.

வடகிழக்கு முஸ்லிம் மக்களுக்கு தமிழ்த் தேசிய சக்திகள் இழைத்த அநீதிகளை களைகிற பணியை அங்குலம் அங்குலமாகவேனும் எனது வாழ்வினாலும் எனது கவிதைகளாலும் முன்னெடுத்தே செல்கிறேன். இது எனது இருப்புக்கு வாழ்வர்த்தம் தருகிறது. இது தொடர்பான எனது அக்கறைகள் மிக மெதுவாகவே முளை விடுகிற போதும் அவை நல்ல நிலத்தில் விழுந்த நல்ல விதைகள். இதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

எனது முயற்சிகள் கிழக்கில் குறிப்பாக அம்பாரை மாவட்டத்தில் தமிழர்களுக்கு அநீதியிழைத்த முஸ்லிம்களின் மனதையும் பண்படுத்தி வருகிறது. இதுபற்றிய பிரக்ஞையை முஸ்லிம் கலைஞர்களுக்கும் ஏற்படுத்துகிறது. இது எனது வாழ்வை அர்த்தப்படுத்துகிற வெற்றியாகும். எனது கவிதைகள் எனது கனவுகளாக மட்டுமல்ல எனது முயற்சிகளாவும் எனது போராட்டங்களாகவும் எனது வாழ்வாகவும் ...... எனது வாழ்வின் அர்த்தங்களாகவும் .........

அநீதிகளும் அகதிகளும் இல்லாத உலகத்தையே நாங்கள் அனைவரும் கனவு கண்டோம். எனினும் அத்தகைய உலகத்தை சிருஷ்டி செய்கிற பாதையில் தவறுகளை நியாயப்படுத்திய நாங்கள் அனைவருமே புதிய அநீதிகளையும் புதிய அகதிகளையும் உருவாக்கியிருக்கிறோம் இதுதான் கொடுமை.

வடக்கிலும் கிழக்கிலும் தமிழ்த் தேசிய சக்திகளதும் கிழக்கில் முஸ்லிம் தேசிய சக்திகளதும் மனசு சுயவிமர்சனத்தால் பண்பட எனது கவிதைகள் ஒரு சிறு அளவிலாவது பங்களிப்பு செய்யும் என்கிற நம்பிக்கை எனக்குள் நிரம்பி வழிகிறது.

எரிந்த வீடுகளின் புதிய கூரைகளில் பறவைகள் பாடவும் கொல்லப் பட்டவர்களது புதை குழிகளில் புதிய மலர்கள் மலரவும் நான் பிரார்த்திக்கிறேன். புதிய பறவைகளது பாடல்களும் புதிய மலர்களது வாசனையும் எரிந்த வீடுகளில் பிறந்து வளர்ந்த இளைய முஸ்லிம்களையும் தமிழர்களையும் ஒன்று சேர்க்கும். இறந்தவர்களது புதை குழிகளில் கண்ணீர் வடித்த முஸ்லிம் பெண்களதும் தமிழ்ப் பெண்களதும் மனசை நிறைய வைக்கும்.

இதை விட எனக்கு எதுவும் வேண்டியதில்லை.
இது மட்டுமே எனக்கு வேண்டியது

**RØDVET VEI 75**
**0955 OSLO**
**NORWAY**
**Tel. 22160719**

**வ.ஐ.ச. ஜெயபாலன்**
17.02.1998.



## யானை

ஓநாய் துரத்தும் மான்கிழையாக
உலகெலாம் சிதறித் தொலையுமென் குடியின்
கடைசி நம்பிக்கைச் சொற்களிலிருந்து
சிறகை விரித்தது கவிதை.
ஈழ நாட்டில் துப்பாக்கிகளிலும்
மேலை நாட்டில் துடைப்பங்களிலும்
தாளமிட்டு
நாமெலாம் அந்தக்கவிதையைப் பாடினோம்.

ஒடுக்குதல் ஒழிக எனப்பாடும் போதெலாம்
எம் எழுச்சிப்பாடலை அபஸ்வரம் கிழித்தது.
விடுதலை என்று பாடும் போதெல்லாம்
எம் புரட்சிப்பாடலின் சுருதி குலைந்தது.

யார் சதி செய்பவன்
யார் எம் கனவினுள் மலத்தை எறிபவன்
யார் எம் தலையில் மண் போடுபவன்
பார்த்துச் சொல்லென
வானில் பறக்குமெம் கவிதையைக் கேட்டோம்.

அது வரை சிறு குயிலாகப்பறந்த நம் கவிதை
மலைக்கழுகாகி
வானமிடறச் சிறகை விரித்தது.
சுவர்க்கத்தையும் நரகத்தையும்
தட்டிக் கேட்டது.

"யார் சதி செய்பவன்
யார் நம் தலையில் மண் போடுபவன்"

"ஈழத்தமிழர் யானைகள் போல்" என
தேவர்கள் சொன்னார்.
"ஈழத்தமிழர் வலிய யானைகள் போல்" என
அசுரரும் சொன்னார்.
ஆத்திரமடைந்த நமது கவிதை
தேவர், அசுரர் முகங்களிலெலாம்
வசவுகள் உமிழ்ந்தது.

வீடு திரும்பும் வழியில்
* புத்தளம் கரையில் பறக்கும் போது
தற்செயலாக கீழே பார்த்தது.
கீழே பார்த்ததும் ஓவென அழுதது.
தலையிலும் மார்பிலும் மோதி மோதி
ஒப்பாரி வைத்தது.

நமது கவிதை
நமது முகத்தில் சிறகால் அடித்தது
நமது கவிதை
உலக மக்களின் மனதிலும் தைத்தது.
கீழே புத்தளத்து உப்புக்களரில்
முட்புதர்களிடை நிழல் காணாது
கண்ணீரோடு அலைந்தெம் குடி.
'முஸ்லிம்' என்று பழித்து
கச்சைத்துண்டையும் பறித்துக் கொண்டு
ஊரை விட்டு நாமே விரட்டிய
நம்குடி.

* ஈழத்தின் வடபுலத்திலிருந்து 1990ல் தமிழ்ப் போராளிகளால் துரத்தப்பட்ட 70,000 தமிழ்ப் பேசும் முஸ்லிம் மக்களில் பெரும் பகுதியினர் புத்தளம் மாவட்டத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.)

- இந்தியா டுடே - (இலக்கிய மலர்) - 1995



# உயிர்த்தெழுகிற கவிதை

யாழ்ப்பாண நகரி,
கழுகுகள் மொய்த்த பிணமாய்ச் சிதைந்த
என்னரும் தாயே,
ஆயிரம் ஆயிரம் வருடம் படர்ந்து
என்னையும் பூத்து
உலகெலாம் தொட்ட உன்
தொப்பூழ் கொடியிலும் வலியதோ
உன் மீது அன்னியர் ஊன்றிய கொடிகள்.

செண்பகப் பெருமாள், பறங்கித்தலைவன்
ஒல்லாந்தர், வெள்ளையர் என அணிவகுத்து
வந்தவர் சுவடுகள் எல்லாம் அழிய
வளர்ந்ததெம் சுவடுகள் வரலாறாக.

இன்று
குலைக்கப்பட்ட கூடாய் நீ சிதைய
லட்சம் லட்சமாய் தெருவில் இறங்கிப்
பாலுக்கழுத பிள்ளையின் வாயில்
குடையால் வழிந்த மழை நீரூட்டிய
வீரத்தாய்களின் நெஞ்சில் எழுந்த
நெருப்பின் முன்னே
நிலைக்குமோ உன்னைப்
பிணித்த சங்கிலிகள்.

இக் கொடுமைகள் கண்டு தமிழ் நாடழுதது
இக் கொடுமைகள் கண்டு உலகமே அதிர்ந்தது .....
இக் கொடுமைகள் கண்டு
கொழும்பேன் மகிழ்ந்தது ...... ?
சொல்க கொழும்பே சொல்க கொழும்பே
நாம் யாருனக்கு
எமது துயரில் நீ ஏன் மகிழ்ந்தாய்.
சென்னையை விடவும் நீ ஏன் எமக்கு
தொலைத்துப் போனாய்
நியூயோர்க்கை விடவும் நீ ஏன் எமக்கு
எட்டியிருந்தாய்.

எதிரிகளல்ல
எமது ஊர்மண் மசூதிகள் முன்றலில்,
எல்லைப்புறத்து விகாரைகள் மருங்கில்,
இந்தியாவின் சிற்றூறொன்றில்
நாமே உன்னை வீழ்த்தினோ மம்மா
இது எப்பவோ முடிந்த காரிய மம்மா.

யாழ்ப்பாண நகரி
சாம்பரில் துடிக்கும் "போர்ணிக்ஸ்" பறவையே
நமது கோணல்கள் யாவும் திருத்தி
தீயிலிருந்துன் சிறகுகள் விரிய
மனிதராய் மீண்டும் நிமிர்வோ மம்மா.

- சரிநிகர் - 1997



## இல்லறம்.

ஆற்றம் கரையில்
இன்னமும் தோற்றுப் போகாத் மரம் நான்

இன்று தெளிந்து போய்
புல்லும் சிலும்பாமல் நடக்கிறது காட்டாறு
விடியலிலிருந்தே ஒளியைக் கசக்கி
கோலிப்பண்டிகைக் குறும்போடு
வண்ணங்கள் வீசி
தொட்டுத் தொட்டு செல்கிறது அது.
நேற்று வெறி கொண்டாடியது தானல்ல என்பது போல

எனது கன்றுகள்
முளைத்தெழுகிற நாள் வரையேனும்
கைவிட்டகலும் வேர்மண் பற்றி
பிழைத்திருக்கிற போராட்டத்தில்
நேற்று அடைந்த விரக்தியை மறந்தேன்
அது நானல்ல என்பது போல

நேற்றைய துன்பமும் உண்மை
நாளைய பயமோ அதனிலும் உண்மை
எனினும் இன்றில் மொட்டவிழ்கிறதே வாழ்வு
சிறகசைக்கிறதே வண்ணத்துப் பூச்சிகள்
துள்ளி மகிழுதே பொன்மீன்கள்

நமது அன்றாட மறதிக்குப் பரிசுதானே
இந்த நட்பும் வாழ்வும்.

**08.12.1997**



# நெடுந்தீவு ஆச்சிக்கு

அலைகளின் மீது பனைக்கரம் உயர
எப்போதும் இருக்கிற
என்னுடைய ஆச்சி

காலம் காலமாய் உன்னைப்பிடித்த
பிசாசுகள் எல்லாம் தோற்றுப் போயின
போத்துக்கீசரின் எலும்புகள் மீதும்
தென்னந் தோப்பு.
நானும் என் தோழரும்
செவ்விளநீர் திருடிய தென்னந் தோப்பு.

தருணங்களை யார் வென்றாலும்
அவர்களுடைய புதை குழிகளின் மேல்
காலத்தை வெல்லுவாள் எனது ஆச்சி.

என்ன இது ஆச்சி
மீண்டுமுன் கரைகளில்
நாங்கள் என்றோ விரட்டியடித்த
போர்த்துக்கீசரா?
தோல் நிறம் பற்றியும்
கண் நிறம் பற்றியும்
ஒன்றும் பேசாதே.
அவர்கள் போர்த்துக்கீசரே ..........

எந்த அன்னியருக்கும் நிலையில்லை
எனது ஊர் நிலைக்கும் என்பதைத் தவிர
எதனை எண்ணி நான் ஆறுதல் அடைவேன்.
நாளையிந்தப் போர்த்துக்கீசரும் புதைய அங்கு
கரும்பனைத் தோப்பெழும் என்பதைத் தவிர
எதனை எண்ணி நான் ஆறுதலடைவேன்.

ஆச்சி
என் இளமை நாள் பூராக
ஆடியும் பாடியும் கூடியும் வாடியும்
தேடிய வாழ்வெலாம்
ஆமை நான், உனது கரைகள் நீள
புதைந்து வந்தேனே.
என்னுடன் இளநீர் திருட
தென்னையில் ஏறிய நிலவையும்
என்னுடன் நீர் விளையாட
மழை வெள்ளத்துள் குதித்த சூரியனையும்
உனது கரைகளில் விட்டு வந்தேனே
என் சந்ததிக்காக.

திசை காட்டியையும் சுக்கானையும்
பறி கொடுத்த மாலுமி நான்
நீர்ப்பாலைகளில்
கனவு கான்பதுன் கரைகளே ஆச்சி.

நீ நிலைத்திருப்பாய் என்பதைத் தவிர
எதனைக் கொண்டு நான்
மனம் ஆற என் ஆச்சி.

-குமுதம்- 1995



## போர் நாட்களும் இருப்பும் பற்றிய கவிதை

வாழ்வே வலியது என்ற பாடலுடன்
போரை வழிமறுத்தது வசந்தம்
அவிழ்த்து விடப்பட்டதே
அந்த தலையில்லாத போர்ப்பூதம்.

அது வசந்தத்தைப் பார்த்ததுமில்லை
அதற்குக் கேட்குமோ வாழ்வின் பாடல்
வாழ்கிற வரைதான் மொழியும் இனமும்
என்பதை அறியுமோ அது.

மரண பயத்தில் நசிந்த என் நெஞ்சுக்கு
இசை வைத்தியம் குயில்கள் செய்கையில்
எனது விரல்கள் தாளமிடுவதை
கால தாமதமாகவே உணர்ந்தேன்
கண் ஒழுகியது.

வாழ்வின் நிழலே இருப்பு
அச்சுறுத்தப்பட்ட எனது இருப்பிலும்
தேன் சிந்தின பூக்கள்.

அப்போர் நாட்களில்
துணிச்சலாய் வந்தெம் ஆதரவான
தமிழகக் கூத்தனை
இப்போர் நாளில் பிணி முடக்கியது என்கிறார் யாரோ ....
மனசு நொந்தது.

வெடிச்சத்தங்கள் ஓய்கிற போதெலாம்
பறவைகள் பாடின
துயர்ப்பாறையின் கீழ் நசிந்த போதிலும்
துளிர்க்கும் மனப்புல்.

(கோமல் சுவாமிநாதனுக்கு சமர்ப்பணம்)

**நந்தலாலா மார்ச்- 1995**



## கானல் மான்

முற்றத்து மல்லிகை மேலே வானில்
மாலைச் சூரியன்
"சீனத்து அழகியே போய் வா" என்றேன்.

இனி இரவுக்காரன் இருளுடன் வருவான்
ஏடன் தோட்டத்துப்பாம்பைப் போல
புறத்தை முறைத்து
அகத்தைத் துலக்கிற இருள் அது.
மனிதனைப்பிடித்து
இருப்புப் பற்றிய விசாரணைக் கூண்டுள்
கட்டிப் போடும்
இரக்கமற்ற இரவுக்காரன் இருள் அது.

முல்லைப் பந்தரில் அணில் பாடியது
போய் வருக பொற் சூரியனே என்கிற பாடல்
இதோ என் இரவு விருந்து என்ற படிக்கு
முல்லைப்பந்தரில் மோதி எழுந்தது பருந்து
என் கால்களில் உதிர்ந்தன மல்லிகை மொட்டுகள்.
அதிர்ந்தென் மனது
இரவுக்காரன் வருமுன்னமே நான்
இருப்புப்பற்றிய விசாரணைக் கூண்டுள்
இடறி வீழ்ந்திருந்தேன்.

பிரபஞ்சமே பிரபஞ்சமே என்று கூவினேன்
நானுமோர் அரும்பா
காலப்பருந்தின் நிழல் பெயருகின்ற
மண்ணின் அணிலா
என்று கூவினேன்.
மலைகளும் திருப்பி அதையே கேட்டது
வானும் திருப்பி அதையே கேட்டது. ............

அந்த அணிலின்
கடைசிக் கணத்து கவிதைகள் என்ன?
"பழுத்த மரங்கள் பழகிட ஒரு துணை
பதுங்கவோர் மறைப்பு
குட்டி ஈன்று வளர்க்கிற ஏக்கம்
பருந்துகள் இல்லாத வானம் ........."
சாதாரண மனிதனின் கவிதையே அந்த
ஏழை அணிலின் கவிதையுமாமோ ...........

அந்த அணில் வெறும்
நீரும் நெருப்பும் காற்றும் தீயும்
வெளியும் கொண்டு
வனையப்பட்ட பாண்டம் மட்டுமோ?
மரணம் அதனது தரிப்புக் குறியா
முற்றுப் புள்ளியா.

அகத்தை துலக்கும் இருள் கொடியது
இரவுக்காரன் இன்னும் கொடியவன்.
கானல் நீரும் மானும் போல
புறக்காட்சியோடு இருக்க மட்டுமே
பயிற்றப்பட்டேன் .....
விடியல்க்காரனே விடியல்க்காரனே
இரக்கம் காட்டு .......

**- நினைவு கொளல் - 1995**



## அழுவதே விதியென்றால்

என் தாய் மண்ணின் புதல்வர் புதல்வியரே
தலை பணிந்தேன் சகோதரரே........

I.

அண்ணர்கள் நாங்கள் கொடுமை இழைத்தோம்
உங்கள் மண்ணைப் பறித்தோம்
மாபாதகர்களாய் தொப்புழ் கொடி அறுத்து
அன்னை மண் வயிற்றிருந்தும்மை எடுத்தெறிந்தோம்.
அதன் பின்னும் ஐந்து வருடங்கள்
வடக்கில்
கொழும்பில்
உலகத்து நாடுகளில்
"நானென்ன தம்பிக்கு காவலா" எனக்கேட்கும்
ஆதாமின் காயினைப் போல்
அருளற்றுப் பேசி வந்தோம்.
இதன் பின்னும் கூட நீங்கள் எம்மை வெறுக்கவில்லை.
எதிரி நிலை எடுக்கவில்லை.
இன்னமும் எம்மை அண்ணா என நினைக்கின்றீர்.

என்ன கொடுமை இழைத்தோம் தமிழர்களே
என்ன கொடுமை நாங்கள் இழைத்து விட்டோம்.
என்னுடைய வாழ் நாளில்
வடபுலத்து முஸ்லிம் மனிதர்களே உம் போல இன்னுமோர்
மகத்தான இனத்தவரைக் கண்டதில்லை
இது போல மாண்புடைய உறவுகளை அறிந்ததில்லை
இத்தனைக்குப்பின்னும் ஈழத்தின் குயிலான
என்னை அழைத்து ஒரு பாடல் பாடென்றீர்
எதைப்பாட தோழர்களே எவன் பாடத் தோழியரே
என் கண்ணீரை என் வெட்கத்தை
என் இனத்தின் வரலாற்றுத் தலை குனிவை
கையாலாகாத
என் போன்ற தமிழ்க் கலைஞர்களின் பேடி மையை
எதைப்பாடத் தோழர்களே எவன் பாட தோழியரே
தவறிழைத்தோம் திருத்துவோம் என்றுலக எதிர்ப்பின் முன்
தலைவர்களே வந்து தலை சாய்த்துச் சொன்ன பின்னும்
இன்னும் சில கலைஞர்
இன்னும் சில அறிஞர்
ஏதேதோ நியாயங்கள்
எடுத்துரைக்கும் கயமை தனை
எதைப்பாட தோழர்களே எவன் பாட தோழியரே.

2.
இந்துக்கடலாடி எழுந்துவரும் இளவாடை
நீர் சிந்துகின்ற கூந்தல் துவட்டும் வட கரைகளிலே நீங்கள்
நொந்து வடித்த கண்ணீர்
இதுவரைக்கும் காயவில்லை.
அன்றே அகலிகை கல்லான எங்களது மண்ணுக்கு மீண்டும்
நீங்கள் வந்து
மிதிக்கும் வரை விடிவில்லை.

உங்களிடம் பறித்தெடுத்த நெஞ்சக்கனவுகளை
நினைவுப்புதையல்களை
உங்களது பிள்ளைகளின் எதிர்கால வரலாற்றை
மண்ணின் மேல் உங்களது மதலைத் தமிழ்
ஏன் மறைந்ததென்று அறியாத அங்கலாய்ப்பில்
உங்களது முன்னோரின்
எலும்புச் செல்வங்கள் உறங்குகிற
ஈமப்புதை குழிகளை
அவர்கள் உதிரத்தில் செழித்த பழத்தோட்டங்களை
வாழையடிவாழையென உங்கள் தலைமுறைகள்
"அல்லாஹு அக்பர்" என ஆர்ப்பரித்த பள்ளிவாசல்களை
எல்லாம் முன் வைத்து
உங்கள் காலடியைத் தொட்டு
மன்னிப்பீர் என்று வாய்விட்டலறாமல்
என் இனத்தின் கைவிலங்கு
ஒரு போதும் ஒழிவதில்லை.

3.
பாதகத்துக்கு
வருடங்கள் ஐந்தாச்சு
தவறு, வருத்தம், திருத்துவோம் என்ற படி
தலைவர்கள் வாக்களித்து
வருடங்கள் இரண்டாச்சு
என்ன தமிழர்களே எல்லோரும் நித்திரையா .....

எல்லாம் அபகரித்து
நட்பில்லாச் சூரியனின் கீழ்
உப்புக்களர் வழியே
ஓடென்று விரட்டி விட்ட
குற்றமெதுவும் அறியா இக்
குணக்குன்று மானிடங்கள்
ஐந்து வருடங்கள்
கண்ணீரும் சோறும் கலந்தே புசிக்கின்றனர்....

இன்னும் தமிழர் எல்லோரும் நித்திரையா இதுதானும்
தலைவர்களின் வாக்குறுதி முத்திரையா.

ஆறாம் வருடமும் இவர்கள்
அழுவதே விதியென்றால்
அழியட்டும் இந்நாடு
அழியட்டும் எனது இனம்
அழியெட்டும் என் கவிதை
அழியெட்டும் எனது தமிழ்.

# காயின் - ஆதாமின் மகன் : தனது தம்பியை ரகசியமாக கொலை செய்தவன்

(ஈழத்தின் வட பகுதியிலிருந்து முஸ்லிம்கள் அகதிகளாக துரத்தப் பட்ட ஐந்தாண்டு முடிவடைந்ததை யிட்டு கொழும்பு நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் வாசிக்கப்பட்ட கவிதை)

- அகதி - 1996




## வத்சலாவின் மரம்

இடு காட்டில் ஒரு மரம் முளைத்திருப்பதாக
ஊரார் சொன்னார்கள்
அற்புதமான மரமாம் அது.
ஆலமரமாய் நிழற் குடை பிடித்து
மகிழ மரமாய்க் கமழ்ந்து
மாமரத்தின் உறவு முகம் காட்டி
கனிகள் தருகிறதாம் அந்த மரம்.
அதற்குக் கதை சொல்லும் மரம் என்று
குழந்தைகள் பெயரிட்டார்கள்.
விழுதால் அணைத்து ஊஞ்சலுமாட்டி
கதைகள் சொல்லி கனிகளும் ஊட்டுமாம்.

ஒரு காதல் சோடியோ
அது கனவு மரம் என்று புதுக்கவிதை சொன்னது
அதன் நிழல் பட்டாலே
கனவுகள் ஆயிரம் கற்பனை ஆயிரம்
வசப்படுகிறது மனசுக்கு ,
இது பாமர மனிதனின் கட்டுக்கதையென
விடுபட்ட போதெல்லாம்
நேரில் கண்ட மனிதர்கள் வந்தனர் சாட்சிகளோடு
எல்லோருக்கும் தவிசு வைத்திருந்த அந்த மரம்
பாடும் பறவைகள் சோடி சேரவும்
கூடு கட்டிக் குஞ்சுகள் பொரிக்கவும்
களமான அந்த மரம்
தமிழ் மலையாளக்கவிதைகள் பாடுவதாய்
நேரில் கேட்ட ஒருவன் சொல்கையில்
பொறுமை இழந்தேன்.
துயிலாத ரயில் பயணத்தின் முடிவில்
சூரியனை ஈனுமக் கரையை அடைந்து
இடு காட்டுக்கு வந்த போது
ஒரு பெண் நின்றாள்.
வத்சலா என்றாள்
இது என் மரம் என்றாள்
இது என் முன்னோர் இது என் கணவன்
இது என் பரம்பரை என்றாள்.
பாங்கு ஒலித்த போது அந்த மரத்தின் கீழே
தொழுகைப் பாயை ஓர் முஸ்லிம் விரித்தான்.
கோவில் மணியில்
சிவசிவ என்றோர் இந்து தொழுதான்.
மனிதமா இங்கு முளைத்திருக்கிறது
ஒன்று நான் வியந்தேன்.
வேரோடிப் புதைந்து கிடந்தது
ஒரு மனிதனின் நடுகல்

(ஆனந்தனுக்குச் சமர்ப்பணம்) 1996



## உயில்

கண்ணி வெடிகள் புதைந்த நிலத்தில்
கனித் தோட்டங்கள் வளர்க்கப் போகிற
என்னரும் பேரரே....
என் பேரரின் பேரரே....
உங்களுக்காக
இல்லாது போன நேற்றும்
இன்னும் தோன்றாத நாளையும்
இன்றுமாயிருக்கிற வாழ்வின் பாடலை
கற்களில் பொறிப்பேன்

உங்களுக்காக
துப்பாக்கிகளில் மாட்டுப்பட்டு
எதிர் புதிர்ச் சுழற்சியில் கிழிந்துபடுகின்ற
ஈழத்துக் கவிதையை மீட்டு வந்து
வாழ்வின் படுகையில் ஓடவிடுவேன்.

நம் கால்களில் ஏறியது
இன ஒடுக்கல் போர் எனும் விச முள்
முள்ளை எடுக்க முள் கைக்கொண்டோம்
முள் கைக்கொண்ட நம் தலையாரிகள்
முள் எடுத்தலை மறந்து
முள் வழிபாடும் முள் சமயமும் வளர்த்தனர்
புனித முள்ளினால்
தம் கண்களையே குத்திக் கொண்டனர்.

தமிழருக்கினி ஒளியே எதிரி
விளக்கேற்றுபவனே துரோகி என்றாயிற்று
மின்மினிகளைக் கூட
தெருக்கம்பங்களில் அறைந்து கொன்றிட
முள் கோவில்களின் மடாதிபதிகள்
உத்தரவிட்டனர்
முள் கோவில்களிடை
யார் முள் உண்மைத் தெய்வ முள்ளென்று
முடிவிலாப் புனித யுத்தம் வெடித்தது....
இப்படியாக எதிரி வென்றான்
இவ்வாறான இன்றில்
உங்களுக்காக நாங்கள் வாழ்ந்தோம்
வசந்தத்தைத் தேடி பூத்துக் கனிந்தோம்
வியர்வை மண் சிந்தி
பொன்விளைச்சலாக ரசவாதம் செய்தோம்.
நீங்கள் இன்றைய எமது காதல்
நீங்கள் இன்றைய எமது கலவி
நீங்கள் இன்றைய எமது வியர்வை
நீங்கள் இன்றைய எமது வாழ்வு

இன்று நாம் பதித்த சுவடுகள் தானே
நாளைய உமது படுகையாய் நீள்வது
கனவும் கனிவும் அற்ற தலையாரிகள்
கண்களைப்பறித்த பின்னருங்கூட
எதிரியைத்தடுக்கும் காவல் அரணாய்.

தம்மை நிறுத்திய
இன்றைய இளைஞரின் கனவே நீங்கள்
அந்த மாவீரரின் கனிகளே நீங்கள்
எது எம் நாடு
சுட்டெரித்த வெறும் மண் பாலையா
மக்களா சொல்க .... ?
பறவைகள் விலங்குகள்
பாம்புகள் மீன்கள்
கரைகள் காடுகள் கழிகள் தூய காற்று

செடி கொடி தாவரம் நாங்கள் என்று
கோக்கப்பட்டு
வடக்குக் கிழக்காய் நீள்கிற யாவும்
நம் தாய் நாடு
கோவில்கள் அடுத்து பள்ளிவாசல்கள்
சிலுவைகள் நிமிரும் தேவாலயங்களும்
வடக்கு கிழக்கு மண்ணில் இருக்கிற
விகாரையும் சேர்ந்ததே எம் தாய் நாடு
அம்பாரை வாழும் சிங்களக் குடி மகன்
ஈழமே எனது தாய் மண் என்று
நெஞ்சை நிமிர்த்தும் திருநாளென்றோ
என் தாய் மண்ணின் விடுதலைத் திருநாள்
நாளை நீங்கள்
தியாகிகளுடைய சமாதிகளிலே
அஞ்சலி செய்கையில்
நம் நந்த வனத்தில்
தென்றல் முக மூடி அணிந்த புயல்கள்
தின்று தீர்த்த ஒளி விளக்குகளையும்
நினைவு கூறுங்கள்.

யாழ் நூலகத்தை எரித்தது போல
யார் எங்களது நூலகமான
மக்பூலுக்கு நெருப்பு வைத்தது
யாழ் நூலகத்தை எரித்தது போல
யார் எங்களது நூலகமான
வணசிங்காவைக் கொழுத்திப் போட்டது
யாழ் நூலகத்தை எரித்தது போல
யார் எங்களது நூலகமான
பிதா சந்திரா பெர்ணாண்டோவை சாம்பாராக்கியது
யாழ் நூலகத்தை எரித்தது போல
யார் எங்களது நூலகமான
கந்தசாமியை கருக்கிப் போட்டது
யாழ் நூலகத்தை எரித்தது போல
யார் எங்களது நூலகமான
சபாலிங்கத்தை பரிசில் அழித்தது
செல்வியைப்பிடித்து நீறாக்கியது
யார் ஐயாவோடு செல்வா தோழரை
வன்னியில் பிடித்து ரயரில் எரித்தது
பதவிப் போட்டியில் தம் தோழரைக் கொல்ல

யாழ்ப்பாணத்து வைத்தியசாலையை
கசாப்புக்கடையாய் மாற்றியவர் யார்
தாங்களும் தீவிர போராளிகளே
என நிரூபிக்க
விஸ்வமடுவிலோர் ஏழையைப்பிடித்து
உளவாளியெனக் கொன்றெரித்தவர் யார்
முள் பூசாரிகள்
குருட்டு முள் பூசாரிகள்
உங்களுக்காக இன்னுமொரு விளக்கை
ஏற்றியே அணைந்த விளக்குகள் இவர்கள்

உங்களுக்காக பிஞ்சினை வளர்த்தே
உதிர்ந்த மலர்கள் இவர்கள்
இன்றைய தீர்ப்புகள் இப்படியாயிற்று
நாளையிந்த பேராற்றப்படுகையில்
புதுவெள்ளமாகப் புரண்டிடவுள்ள
என்னரும் பேரரே
நாளை உங்கள் தீர்பெதுவாகும்?
முகத்தில் கரியைப் பூசி
சாக்கடைகளிலே வீசப்பட்ட
பொற்சிலைகளுக்கு
நாளை உங்கள் தீர்ப்பு எதுவாயிருக்கும்?
காக்கா பொன் சூடி
பீடங்களிலே ஏறிக்குந்திய
சாணிச்சிலைகளுக்கு
உங்களின் தீர்ப்பு எதுவாயிருக்கும்

என்னரும் பேரரே உங்கள் நாட்களில்
முட்கோவில்களின் அத்திவாரத்தையும்
பெயர்த்துப் போடுங்கள்
என்னரும் பேரரே உங்கள் நாட்களில்
பூக்களாகவும்
வண்ணத்துப் பூச்சிகளாகவும்
பறவைகளுடைய சங்கீதமாகவும்
உங்கள் உங்கள் கனவுகளாகவும்
நாங்களும் வாழுவோம்

**10.06.1994**

(அமரர் சபாலிங்கம் நினைவு மலருக்கு எழுதியது)



# வாழவிருப்பம்

உட்கொலை மலிந்து
விடுதலைக்கனவுகள் சிதைந்த
எண்பத்தாறின் கோடை.
ஏழை பஞ்சில் ஆடையும்
பஞ்சு ஏழையில் அணிகளும் நெய்கிற கோவைப் புறநகர்.
தலை மறைந்திருந்தேன்.

'பார்த்தீனிய' செடிச்சாத்தான்கள்
சிரிக்கிற வெளியில்
விழுந்த நிலவு உடைந்து வழிகிற இரவில்
சன்னலில் நானுமொர் கம்பியாய் நின்றேன்.

மின்னலில் இறங்கி நிலவை மீட்க
தாரகைகள் திட்டம் தீட்டின.
காப்பாற்றுங்கள் என்ற என் கூச்சலில்
பால் வழி அதிர்ந்தது.
வாழும் ஆசையே மனிதரை மீட்கும் என
தாரகைகள் கண் சிமிட்டின.
மானுடத்தின் வரப்பிரசாதம்
வாழும் ஆசையே என்பதை உணர்ந்தேன்
கம்பளிப் பூச்சியாய் கைகளுள் நெரிபடும்
நித்திரைக் குளிகைகளை தூர வீசினேன்.
தொலைந்த வாழ்வின் ஆசையைத் தேடி
கதவைத்திறக்க ஞானம் சுடர்ந்தது.

விடிகதிர் புணர விந்துதிர்கின்ற
முல்லைப்பந்தரின் கீழே வாசலில்
துவாலையும் சிறுவாணிதேக்கமும் சேர்த்து
அள்ளி முடித்த மயிரி
ஒரு சுந்தரியான மலையாளக்குட்டி
கோலமாவு சிந்தும்
செம்மீன் விரலால் நிலம் தீண்டி
வாழவிருப்பம் என்று எழுதுகிறாள்.

**- மூன்றாவது மனிதன்- 1996**



## பூவால் குருவி

நெஞ்சுள் தொலையாதிருந்து
ஒரு சிற்றாறாய் ஊருகின்ற
என் முதல் காதல் பெட்டை ........
ஒரு வழியாய் உன் சேதி அறிந்தேனடி.
பேய்கள் கிழித்தெரிக்கும் எம்முடைய தேசத்தில்
வன்னிக் கிராமத் தெருவொன்றில்
வெள்ளிச்சருகை மினுங்கும் தலையும்
பொன் சருகை கலையா முகமும்
இன்னும் ஓயாமல் முந்தாணை திருத்த எழும் கையுமாய்
போனாயாம் உந்தன் பூப்படைந்த பெண்ணோடு
போட்டிச் சிறு நடையில்
அது என்ன போட்டி.

காவலிலே உன் அன்னை தோற்றதறிவாய்.
அவளிடத்தில் உன் பாட்டி தோற்றதையும் நீ அறிவாய்
என்றாலும் வாழ்வின் சுழற் தடத்தில்
இன்று நீ அன்னை

நீ தோற்க வாழ்வு மேலும் ஒரு வெற்றி பெறும்
ஆனாலும் நீ எனக்கு இன்னும் சிறுக்கிதான்.
இன்னும் விடாயும் அச்சமுமாய் மிரண்டடிக்கும்
குளக்கரையின் மான் குட்டி.

நானுமுன் நெஞ்சத்தில் சிற்றாறா
இன்னும் காலில் விழுந்து கையேந்தி இரக்கின்ற
திருட்டுச் சிறுபயலா
அஞ்சி அஞ்சி நாங்கள் அன்று
உடற்கடலில் கைநனைத்து கால் நனைத்து
நீந்த முயன்றதெல்லாம் எண்ணில்
மேனி இன்பத்துணுக்குறுதே.

எறிகுண்டாய் வானத்தியமன்
கூரை பிரித்துன் பின் வீட்டில் இறங்கிய நாள்
உன் முன் வீட்டுப்பிள்ளை தொலைந்தாளாம்.
பின் ஒரு நாள் ஊர்காண
காக்கி உடையோடு வந்து காட்டோரம் பூப்பறித்து
கூந்தலிலே சூடி நடந்தாளாம்
தெருவெல்லாம்
நீ உனது பூப்படைந்த பெண்ணின் காவலிலே
நிழலாய் திரிகிறியாம்
இது பெருங்காவல்
எல்லாம் அறிந்தேன்.

எங்கிருந்தோ வந்து
நம் தெருவோர மரக்கிளையில் குந்தி
தேவதையின் கூந்தலெனத்தன் பூவால் அசைத்த
அந்தக் குருவியைப் போல்
காணாமல் போனதடி காலங்கள்.

- சரிநிகர் - 1997

## இருத்தல்

வாலாட்டி வாலாட்டி
நீருள் இரத்தினங்களாக வெயில் சிதைய
மகிழ்ந்திருக்கும் சிறு மீன்கள்.
காற்றில் முளைத்து
தாழை மடலில் தரை இறங்கும் மீன் கொத்தி.
மீண்டும் அமர்ந்தேன்.

தென்னங்கீற்றுத் தோகைக்குள்
இசைத்த சிறு குருவி சிறகை விரித்தாச்சு
இனி வானத்துச்சிப்பி வயிற்றுள்
மிளிருகின்ற சூரியனும் செரித்து விடும்
நீர்க்கரையில் பாம்புகள் கண் விழிக்கும்.

கைபற்றிக் கதைத்திடவும்
மறையும் வரை பின் பக்கம் பார்த்திடவும் தூண்டுகின்ற
முலையரும்பும் பரட்டைத்தலைத் தேவதைகள்
தம்மனசில் வண்ணக்கனவாய் குமிழி விடும்
ரீங்காரம் எல்லாம் காற்றில் உமிழ்ந்த படி
ஆடுகளின் பின்னாடி போய்விட்டார்.

வணங்காமுடிப் பனைகளின் பின்
தூரத்தே
இடிமுழங்கிப்பறக்கும் அசுரர்களின்
சிறகோசை கேட்கிறது.
விரைந்த படி "அண்ணே கவனம்" என்ற
துப்பாக்கிச் சிறுவர் சிலரும் மறைந்து விட்டார்.

இன்னும் நுனி நாவில்
அனுதாப வார்த்தைகளை கோர்த்த படி
இருளில் இருக்கின்றேன்.

**-சுபமங்களா- 1994**



## பொன்னியைத் தேடி

தமிழகப் பெரியம்மா வீடு வந்ததும்
காவிரிப் பெண்ணை பார்த்திடத் துடித்தேன்
கண் கலங்கினாள் பெரியதாய்.

வரும் வழியெலாம் மண் பசி தீர்த்து
ஆத்தாள் அல்குல் மறைக்க
மரகதப்பட்டு மருதும் தந்து
புரவலர் போலப் புரளும் காவிரிக்
கரைகளைத் தேடி நடந்தேன்.

ஆதி சேடன் எறிந்த
உலர்ந்த பாம்புச்சட்டை போல் நீள
காவிரி நடந்த சுவடே கிடந்தது.

"எங்கே காவிரி...?"

கரைகள் இரண்டிலும்
சவுக்கடி பிய்த்த உடலும்
சாணிப்பால் வழியும் வாயுமாக
நூறு நூறாண்டாய்
வயல்களில் வீழும் புலையரின் ஆவிகள்
நதியின் மீது தாகமாக அலைந்தன.

"காவிரி குடித்தவை இவையா" என்றேன்.

உடைந்த நெஞ்சுடன்
பொன்னியைத் தேடினேன்.
அவள் இந்திர விழாக்களில்
கூந்தலில் ஆயிரம் படகு மலர் சூடி
நடந்த பாதை நெடுக
ஒட்டகமேறி அலைகிற போது
அச்சமடைந்தேன்.

காவிரி குடித்ததும்
ஈழத் தமிழரே என்று பழி சொல்வாரோ?

**-சுபமங்களா- 1995**

## பிரார்த்தனை

நான் கவிதை பாடும் எறும்பு
தேன் சிந்திடும் எம் சந்தனக்காட்டில்
கிளையோடிருந்து
நம்பிக்கைக் கூத்து ஆடிய எறும்பு.

வசந்தத்தில் பூவும் மதுவும் பகிர்ந்து
வழி தெருவெலாம் களித்துத் திரிவதும்
கோடையெல்லாம் இறைவனின் வயல்களை
அறுவடை செய்தெம்
பண்டசாலை யாவும் நிறைப்பதும்
வாடை வீச வீச மனைகளில் புணர்ந்து

எமது உயிர்ப்பின் வெண்கனிகளை இடுவதும்
மாரி முழுதும் எம் கனிகளின் போர்வையாய்
முத்தமிட்டு அணைந்து கிடப்பதும்
பனி காலத்தில் குஞ்சுகளோடு குலவி
மீண்டும் மது மணக்கும் தென்றலை
சன்னல்கள் தோறும் காத்துக்கிடப்பதும்
அல்லது வேறெது புரிந்தோம் அல்லாவே
அல்லது வேறெது புரிந்தோம் யேசுவே
அல்லது வேறெது புரிந்தேம் சிவனே
அல்லது வேறெது புரிந்தோம் புத்தனே.

தேவனே தேவனே
ஏன் எமது பாடல்கள் பறித்தீர்
ஏன் எம்மீது ஒப்பாரிகள் நிறைத்தீர்
அடை மழை என்றால் எமது முட்டைகளை
மேட்டில் சேர்த்து விழித்திருந்திடலாம்
ஏன் எம்மீது தீ மழை பொழிந்தீர்
ஏன் எம்மீது குருதி பெருக்கினீர்
வேட்டை நாய்க்ள் மொய்த்த தெருக்களில்
குட்டியோடலையும் பெட்டைப் பூனையாய்
காடு மேடு கடல் வயல் என்றெமை
முட்டைகள் காவி ஏன் ஓட அலைக்கிறீர்.
ஏன் ஏன் எம்மை
முடிபுனைந்து கொடுங்கோலோச்சும்
யுத்தக்குற்ற வாளிகள் காலில்
அனாதரவான குடிகளாய் வீழ்த்தினீர்
ஏன் எமை அவர்களின்
அலுமினிய வேட்டைக்கழுகுகளின்
தீனியாய் கைவிட்டீர்

ஏன் எமை உலகின் தெருக்களில் எல்லாம்
புழுதியாகப்பறந்திடச் சிதறினீர்

போதாக்குறைக்கு
நம்மில் நாமே இடறி விழவும்
நம்மை நாமே கடித்துக் குதறவும்
ஏன் எம்மை தெருக்களை இருளில் மூடினீர்.

இறைவா இறைவா
உனக்கு வேண்டில் எம்மைப் பலி கொள்
எம் முட்டைகளைக் காப்பாற்று
எம் குஞ்சுகளை வாழ விடு
"களபலியாக கால இருளை
துடைத்து எறிவோம்" என்றெம் குஞ்சுகள்
விழுவதைக்கானவா எமை வைத்திருந்தாய்
இதற்காகவா நாம் இன்னமும் இருந்தோம்.
"தர்மமே வெல்லும் வெல்லும்" என்று
பலிகள் பெறுகிற தெய்வமே
எத்தனை எத்தனை நாள் இக் கொடுமைகள்
எத்தனை எத்தனை நாள் இக் குடிமைகள்
எத்தனை நாட்கள் இந்த இருட்டு
இன்னும் எத்தனை நாட்கள் தொலைவில்
'வாக்களிக்கப்பட்ட' எம் சுதந்திர பூமி.

## தரிசனம்

துருவத்தில் தொடங்கி
தொலையாது நீளுமென் நெடும் பயணத்தில்
நைந்து போன கண்களை விழித்தேன்.
கோயம்புத்தூர் மீது பறப்பதாய்
விமானி உரைத்தான்

என் கோவையின் மீதா
தசாப்தம் முன்னே
உயிருக்கஞ்சி நான் ஓடிய போது
வருக என் அடைக்கலம் என அரவணைத்த
கோவையின் மீதா
உப்பிட்டவரே உங்களை நினைத்தென்
கவி மனம் கிளர்வதை
காண்கிறீரா

பசிய கந்தல் விலகிய மார்பில்
அறுத்த காவிரித் தாலி மின்ன
முகிற் பாவாடை கலைகிற போதெலாம்
சிறுவாணித்தேக்க கருமணி துலங்க
என் தமிழகத்தி துயில் நீங்குகிறாள்

நெடுநாளின் பின்
காதலி உன்னைத் தரிசிக்கிறேன்.
என் பெரும் துயர்களில்
முகம் கோணாது பங்கு கொண்டவர் யார்
எரியும் நெருப்புள் என் புகலிடம் ஏது
புயலிடை எனது அகல் விளக்கதனை
அணையாது காத்த தேவதைக்கரம் எது
மன்று மன்றாய்
'கள்ளமற்றவன் என் காதலன்' என்று
வழக்குரைத்த கண்ணகி யாரோ.

என் ஆருயிர்க் காதலி
காமுற்று நீயே பளிச் சென சீவி
பொன் பூண் பொருத்தி அழகு பார்த்த
சூரிய எனது கொம்பை அசைத்துன்
மார்பில் பாய்ந்தேனே.

கீழே தெரிவன
தூத்துக்குடியின் துறை முகம்.
சிதம்பரனாரின் கண்ணீரும் கனவும்
இன்று வரைக்கும் முத்தாய் விழைகிற
உப்பளத்து வரப்பு மேடுகள்.
என் போல் ஓயாது
உன்னைத் தழுவ அலையும் பெருங்கடல்
தொலைவில் இருந்த குமரிப்பாறையாம்
உனது பாதைப் பெருவிரல் தன்னை
கண்களால் தொட்டு
மன்னித்திடுக என்று பணிந்தேன்.

நளாயினிப் பெண்ணே!
மீண்டும் வருவேன் புதிய மனிதனாய்
மீண்டு வருவேன் புதிய கவிதையாய்.

-சரிநிகர்- 1996

## சோங்ஸ்வன் ஏரியும்
## இலையுதிர் காலமும்

இது கோடை நாட்களில் எனை மகிழ்வித்த
சோங்ஸ்வன் 'ஏரியா?
காணுமிடமெல்லாம் ஏன் குளிர்ந்த சோகம்?

பசுமையாய் சிரித்து வருக என்னும்
கலகலப்பான பேர்ச் மரங்களின்று
மஞ்சள் கண்ணீர் மௌனமாய் உதிர்ப்பதேன்?
பாதை மருங்கெல்லாம் பள்ளிச் சிறுவர் போல்
வெண்பல் துலங்க முறுவலித்திருந்த
டெய்சிகள் எல்லாம் எங்கே மறைந்தன?

சொல்க சோங்ஸ்வன், நிகழ்ந்தது என்ன?
சொல்க பேர்ச் மரங்களே, நிகழ்ந்தது என்ன?
மஞ்சள் கொண்டு மரம் செடி கொடிகளில்
காலம் எழுதிய சேதிதான் என்ன?

தீய தொன்றில்லை என்றன மரகதப் பைன்கள்.
வைக்கிங் வீரர் கை ஈட்டிகள் போல
விறைப்பாய் நின்ற பைன் மரக்காட்டை
வியப்புடன் பார்த்தேன்.
உண்மைதான் ஆமோதித்தது சோங்ஸ்வன் ஏரி.

“அதோ பார் அந்த நோர்வே கிழவனை”
அலை நாக்கசைய சோங்ஸ்வன் பேசும்.
“அவனை நன்கறிவேன்.
அன்று தனது இளமை நாட்களில்
கண்ணுள் விழுந்த நிலக்கரி துகள் போல்
ஹிட்லரின் படைக்கு தொல்லைகள் தந்தான்.
நாடு விடுதலை எய்திய பின்னர்
காதலாலும் கடும் உழைப்பாலும்
சமாதானத்தை மகிமைப்படுத்தினான்.
இன்று அவனோர் தொண்டுக்கிழவன்
எனினும் இந்த இலையுதிர் நாட்களில்
புலம்புதல் இன்றி
கோடையிலிருந்த அதே குதூகலத்துடன்
தனது பேத்திக்காய்
வெண்பனிச் சறுக்கியை பழுது பார்க்கிறான்
உயித்துடிப்போடு உலகம்
இன்றுமுள்ளது
நாளையும் இருக்கும்.
இப்போது சொல்க தீதெதும் நிகழ்ந்ததா?”

முகில் சீப்பெடுத்து தலை வாருகையில்
பைன் மரக்காடு முகம் பார்க்கின்ற
சோங்ஸ்வன் ஏரியை வியப்புடன் பார்த்தேன்.
புரிந்தது என்று புன்னகை பூர்த்தேன்.

- ஒரு அகதியின் பாடல் -



## எட்டாவது பேய்

என் அயலவரே என் அயலவரே
தொப்பி முட்டாக்குள் சுடர்ந்த ஞாயிறுகளே
மண் விளையாடி மகிழ்ந்த நிலாக்களே
தொட்டில்கள் தோறும் சிரித்த விண் மீன்களே
பல்லின மலர்களால் பின்னப்பட்ட
எங்கள் ஈழத்தமிழ் மண் கிழிந்து
புண் பட உம்மை பிய்த்தெறிந்தனரே
வழி தவறி எமது பிள்ளைகள்.

அன்று நாங்கள் மௌனமாய் இருந்தோம்!
முதல் நாள் குதூகலமும்
இறுதி நாளின் இரத்தக்கண்ணீரும்
ஒட்டியிருந்த உங்கள் தெருக்களில்
மறுநாள் நரிகளைப் போல நாம் நுழைந்தோம்

உங்கள் வீட்டையே திருடிக் கொண்டோம்
உங்கள் பிள்ளைகளின் உணவைப் புசித்தோம்
உங்கள் தொழுகைப்பாயில் புணர்ந்தோம்
மீசான் கட்டையில் அடுப்பு மூட்டினோம்
எச்சில் கைகளைத் துடைப்பதற்காக
உங்கள் புனித நூல்களைக் கிழித்தோம்
பாங்கொலி இன்றி விடிந்த அவ்விரவில்
தேவதைகள் தொலைந்து போயின
பன்னிரு கைகளை வீசிய படிக்கு
ஏழு பேய்கள் அதன் பின் வந்தன.

தொடர்ந்து வந்த ஏழு பேய்களுள்
ஆறாவது பேய் எம்மீது பாய்ந்தது
நீங்கள் அல்லல்ப்பட்டு ஆற்றாது
அழுது கண்ணீர் பெய்த
பாதைகள் தோறும் நாங்களும் ஓடினோம்
அறுவடை செய்த முட்களைச் சுமந்து.

இதோ வருகிறது எட்டாவது பேய்
இது நமது முடித்தலைகளை உருட்டுமுன்
இது நமது இளவரசர்களின்
புதைகுழிகளிலே மண் அள்ளிப் போடுமுன்
இது நமது கவிதையை அழித்து
ஒப்பாரிகளை காற்றில் எழுதுமுன்
இது நமது காவியப் பெருமையை
காலத்தின் குப்பைக் கூடையுள் வீசுமுன்
மன்றாடுகிறேன்
எம் அயலவரே எம் அயலவரே
ஐ வேளை பாங்கொலியோடு
திரும்பி வந்தெம்மை காப்பாற்றுங்கள்.

-சரிநிகர்- 1997

## சுந்தரமான ஒரு கதை

இம்முறை தன்
வெடிகுண்டுப் பொதி உடலை
மெல்ல கைவிட்டு விட்டு
காணாமல் போன அந்த மனிதன்
இங்குதான்
இந்த மலைகளின் மீதுதான் எங்கேனுமிருப்பான்
வேறு போக்கிடமில்லை
இதுவே அவனது சொர்க்கமும் நரகமும்
இதுவே அவனது காலமும் வெளியும்

இதுவே அவன் தன் வாழ்நாளெல்லாம்
முயன்று முயன்று திரட்டி
வர்க்க உணர்வால் உறையிட்டு காத்த
மலையக தமிழ் இனம் என்கின்ற புளிக்கின்ற பாற்சட்டி

இதுவே நம்மோடிணைந்து அவனும் வாழ்ந்த
மலையகம் என்கின்ற இன்பக்கேணி
இதுவே அவனது பேரர்கள்
ஆடியும் பாடியும் துளிர்கின்ற தோட்டம்
இது மட்டும்தான் அவனுக்குள்ள ஒரேயொரு தேட்டம்.

வெடிகுண்டுப் பொதியை வைத்து விட்டு
தலை மறைவான அந்த மனிதன்
இங்குதான் எங்கோ இருக்கிறான்
இது அவனுக்குப்பழகிப் போன விளையாட்டு.
அவனைக்கடைசியாகக் கண்டதாய் கூறும்
கொழுந்தெடுக்கும் குமரிகள்
அவன் இளைஞனாக இருந்ததாகக் கூறினர்.

அது வேசமாகவும் இருக்கலாம்
வெடிகுண்டுப் பொதியை வைத்துவிட்டு
தலை மறைவாகிற போதெல்லாம் வேசமிடுவது
அவனுக்கு பழகிப் போன ஒரு விளையாட்டு
ஆனால் அந்த காதல் வசப்பட்டுள்ள பெண்கள்
நம்ப மறுக்கிறார்கள்.

அந்த கைவிடப்பட்ட வெடிகுண்டை
பெட்டியில் வைத்து சம்பிரதாயம் போல்
செங்கொடி போர்த்து எடுத்துச் சென்றனர்
இதுதான் அவன் வெடிகுண்டை
பிறரிடம் கொடுத்து விட்டு தலைமறைவாகிய
முதல் தடவை என்று யாரோ சொன்னார்கள்.

'விதியே விதியே நம்மிடமிருந்து
எல்லாவற்றையும் கவர்ந்து சென்றாய்
மூட விதியே உன்னால் முடியுமா

*இதோ விழுந்தாற் போற் கிடக்கின்ற இந்த*
*கண்ணன் எம்மோடு நீர் விளையாடிய*
*மலையக இன்பக்கேணியை கவர்ந்திட*
*அதை இழந்தும் உயிர்த்திருப்போமா'*
*என்று யாரோ சூள் உரைத்த போது*
*சவப்பெட்டி அதிர்ந்ததாக பெண்கள் உரைத்தனர்.*

*அந்த புல்லாங் குழலை*
*திறந்த மலையக வாயிலில் புதைத்ததில் இருந்து*
*காற்றில் எங்கோ இசை கேட்கிறதாம்*
*இருக்கலாம்.*

**(சுந்தரம் ஒரு தொழிற்சங்கவாதி, ஆளுமை நிறைந்த மனிதன். 1960களில் மலையகத்திலேற்பட்ட அரசியல் விழிப்புணர்ச்சியின் முன்னோடி)**

**-நந்தலாலா- 1996**



## மரியம் வேம்பு

பாங்கொலி ஒய்கிற போதெலாம்
அந்த தென்னஞ்சோலைக் கிராமத்தில்
ஓங்கி ஒலிக்கிறது
அந்த வேப்பமரத்தின் அழுகை ஒலி,
தேற்றுவாரில்லை.
நேற்று நடந்ததை யாவரும் மறந்தனர்
இன்று வந்தவர், பிறந்தவர்களுக்கு
நேற்றைய கதைகளைச் சொல்வாருமில்லை.

அந்தப் போடியாரின் பெண்கள் இப்போ
எந்த வீட்டின் வாசற்படியிலும் குப்பை கொட்டலாம்.
அந்தப் போடியாரின் முன்னே இப்போ
வயல்காரர்கள் நிமிர்ந்திட அஞ்சினர்
எனினும் அந்த வேம்பின் கண்ணீர்
நல் மனசுகளில் வேர் விடுகிறது.

அந்தப் போடியார் பள்ளிக்குப் போகிறார்
அதிகாரிகளுடன் மது விருந்தாடி
மனசுள் தன்னை எதிர்ப்பவர்களையும்
அச்சுறுத்துகிறார்.
சட்டிக்குத் தப்பி நெருப்புள் விழுந்த
அந்த ஊரின் சந்தியில் நின்று
அழுகிறது வேப்பமரம்

நீதி செத்த அந்தப்பகலில்
போடியாரின் வெறுப்பைச் சுமந்ததால்
தமிழ்ப் போராளிகளுக்கு தண்ணீர் தந்ததே
குற்றமாய்ச் சுமந்து
வெள்ளைச் சேலை முக்காடு இட்ட
துக்கமாய் குந்தி
“அல்லா” என்று கண்ணீர் சிந்திய மரியத்துக்கு
நிழற்குடை பிடித்த அந்த வேப்பமரம்
ரயரும் பிணமும் எரிகிற வாடையில்
காற்றே குமட்டி வாந்தி எடுத்த
அந்த இரவில் அழத்தொடங்கியதாம்.

ஏன் அழுகிறாய் வேப்பமரமே
நீதி கேட்டாயா
அல்லது எங்கள் மரியம் ராத்தாவின்
தண்ணீர் குடித்து உப்பைத் தின்றவர்கள்
அவளது சடலம், எரிந்த ரயரில் நீட்டிக்கிடந்த சாம்பர்
கலைவதன் முன்னமே
பள்ளிவாசலில், தெருக்களில் இறங்கி
அவளது உற்றார் உறவினர் மீது
செய் நன்றி கொன்ற பாதகம் நினைந்தா?

- சரிநிகர் - 1996



## சன்னல்

துயில் நீங்கி
கனத்த மெத்தைப் போர்வைதனைப்புறந்தள்ளி
சோம்பல் முறித்தபடி எழுந்து
சன்னல் திரை தன்னை ஒதுக்கி விட்டேன்.
இன்று கிறிஸ்மஸ் விடுமுறை நாள்.
புராணத்துப்பாற் கடலில்
சூரியனின்
பொற்தோணி வந்தது போல்
வெண்பனி போர்த்த உலகில் பகல் விடியும்.

வெள்ளிப் பைன் மரங்கள்
இலையுதிர்த்த வெள்ளிப் பேச் மரங்கள்
வெள்ளி வெள்ளி புல்வெளிகள்
என்ன இது
பொன்னாலே இன்கா* க்கள்
பூங்கா அமைந்தது போல்

வெள்ளியினால் வைக்கிங்** கள்
காடே அமைந்தனரோ?
காடுகளின் ஊடேகுதூகலமாய்
பனி மேல் சறுக்கி ஓடுகின்ற காதலர்கள்.
பின் ஓடிச் செல்லும் நாய் கூட மகிழ்ச்சியுடன்.

நான் மந்தையைப் பிரிந்து வந்த தனி ஆடு.
போர் என்ற ஓநாயின்
பிடி உதறித்தப்பிய நான்
அதிட்டத்தால்
வாட்டும் குளிர்நாளில் கூட
வாழ்வை ரசிக்கும் கலையை அறிந்தவரின்
நாடு வந்தேன்.

வெண்பனி மீது சூரியன் விளையாடும்
நாட்கள் எனக்கு உவகை தருகிறது.
என் மைந்தன் என்னோடிருந்தால் இவ்வேளை
நானும் அவனும் இந்த வெள்ளி வெள்ளிக் காடுகளுள்
விளையாடக் கூடுமன்றோ.
"சூரியனைப்பிடித்துத்தா" என்று அவன் கேட்டால்
வெண்பனியில் சூரியனை வனைந்து நான் தாரேனோ.

"ஏனப்பா இலங்கையில் வெண்பனி இல்லை"
என்பானேல்.
முன்னர் இருந்ததென்றும்
கொதிக்கின்ற சூரியனார் அதன் மீது காதலுற்று
அள்ளி அணைக்க அது உருகிப் போனதென்றும்
பின்னர் துருவத்தை வந்து அது சேர்ந்நதென்றும்
அதனாலே சூரியனார் துருவம் வரும்போது
வெப்பத்தை நம்நாட்டில் விட்டு விட்டு வருவதென்றும்
கட்டி ஒரு நல்ல கதை சொல்ல மாட்டேனோ?
கருவிலே இருந்தென் காதல் மனையாளின்
வயிற்றில் உதைத்த பயல்
நினைவில் இருந்தென் நெஞ்சிலன்றோ
உதைக்கின்றான்.
நமக்கிடையே
ஏழு கடலும் இணைந்தன்றோ கிடக்கிறது,
விசா என்ற பெயரில்
வெண்பனி மீது
இன்னும் இந்தக்காதலரும் நாயும் களிப்போடு.

* இன்கா- தென் அமெரிக்கத் தொல் குடியினர்
** வைக்கிங்- நோர்வீஜியத் தொல் குடியினர்

**- ஒரு அகதியின் பாடல் -**

# நீலகிரி
# பயணக் குறிப்புகள்

I.

*வெண்ணிலவு*
*பால் சிந்த மலையிறங்கி*
*புல்மேயும் ஓரிரவு*
*நான்*
*மலையேறும் கோத்தகிரி பஸ்ஸில்.*
*கீழே*
*கருப்புக்கம்பளியில் காக்கா பொன் தூவலைப் போல்*
*மின் மினுக்கும்*
*மூன்று மணி முன்னாடி*
*நானிருந்த சிறு நகரம்.*

பயணப் பொதியோடு இறங்குகையில்
நீலகிரி
பனி இதழால் முத்தமிடும்
காலை இந்த கட்டழகை தரிசிக்க
வேளைக்தெழ வேண்டும்.
உ.
கொசுக்களின்றி
தொணதொணக்கும் மின் விசிறியுமின்றி
துயில் மகிழ்ந்த ஓரிரவு.

செக்கர் பட்டசைய்ய
சன்னலால் நுழைந்தாள்
கட்டியங்காரி.
பறவைகள் கூடி
"எழுந்து பார் எழுந்து பார்" என்றெனை உசுப்பும்.

வாசலில்
"சூரிய தேவன் வருகிறார் பராக்"
எனும்சொல்
துயில் எழுந்தேன் நான்.
3.
சுவடு கலைய
ஜெட்விமானம் போல் அகன்றது
பகல்.
மனிதர்கள் மட்டுமே உலகம் என்றால்
ஏமாற்றங்கள் நிறைந்ததென் வாழ்வு.
எனது உலகிலோ
கடல்கள் நதிகள் காடுகள் வயல்கள்
வான வில்லின் கீழ்
தூய காற்று நிறைந்த புல் வெளிகள்
மலைகள் பள்ளத்தாக்குகள்
வானில் சூரியன், நிலவு
சுடரும் உடுக்கள்,

கீழே பறவைகள் இவற்றுடன்
மனிதர்கள்.
எனது உலகம் உயிர்த்துடிப்பானது.
4.
என்னரும் இனிய உலகின் மீதும்
உண்மையான மனிதர்கள் மீதும்
போர் தொடுத்தனர் அசுரர்கள்
விண்மீன் பூத்த தூய வானத்தின்
பால் வழிபோல்
முன்னர்
தெள்ளென ஓடி தேவகன்னியர்கள்
நீர் விளையாடிய கூவம் அருவியை
சென்னையின் மலக்குடல் ஆக்கி
தூய்மை என்ற முக மூடியுடன்
மரீனாவில் நுழைந்து
மீனவர் ரத்தம் மாமிசம் புசித்த
அசுரர்கள்,
உலகின் மீதும்
மனிதர்கள் மீதும்
போர் தொடுத்தனர் இப்புதிய அசுரர்கள்.

பிணவாடையும் சாம்பல் மேடுமாய்
என்னரும் ஈழத்து ஊர்களை சிதைத்த
ஜெயவர்த்தன மேல்
காறி உமிழ்வதைப் போலவே வெறுப்புடன்
உலகின் எட்டுத்திசைகளும் திரும்பி
புதிய அசுரர் முகத்திலும் உமிழ்கிறேன்.
5.
கூதல்,
சூரியன் கூட வெள்ளைப் போர்வையுள்
குடங்கி நடந்தான்

காலையோர் கடையில்
சூடு பறக்கும் தேனீருக்காக
இருக்கையில்
கந்தல் கறுப்புக்கம்பளி போர்த்திப்
பசித்திருந்ததோர் மூதாட்டியிடம்
பேச்சுக் கொடுத்தேன்.
"யாழ்ப்பாணமா?" என்றெனை விளித்தாள்
எனக்கோ நீலகிரியில் கடல் பார்த்த வியப்பு.
முன்னர் தான் கண்டியில் இருந்தது சொன்னாள்.
இருந்ததே அன்று
இரண்டு நேரச் சோறும் கூரையும்
என அங்கலாய்த்தாள்.
இங்கே சிறு சிறு படகர் காடுகளில்
கொத்தடிமைகளாய் சீரழிகின்றோம்.
யாழ்ப்பாணத்து பதுங்கு குழியில்
முடங்க மறுக்கும் சிறுவனைப் போன்று
இருண்ட கண் குழிகளில் ஒரு துளி கண்ணீர்.

"இந்தியாவுக்கு எப்போ வந்தாய்?"
எழுபத்தி மூன்றில்.
"அப்போதெல்லாம் இன மோதல் இல்லையே
ஏனம்மா வந்தாய்?"
"வானசாஸ்திரி சொன்னதை நம்பி....
நாங்கள் வந்தோம் நட்டாற்றில் நிற்கிறோம்..."
வானசாஸ்திரியா?
குழப்பமடைந்தேன்.
நெடுநேரத்து மௌனம் உடைய
நண்பன் கேட்டான்
"சிறிமாவோ சாஸ்திரியா?"
"ஆமடா மகனே அதே சாஸ்திரிதான்"
ஈழத்து மலையிலும் தமிழகத்திலும்
வாழும் மக்களை மிதித்துச் சென்று
டெல்கியும் கொழும்பும் கையெழுத்திட்ட
முதல் ஒப்பந்தமே இப்படி நாறும்.

6.
இப்படியாயிற்று நமது தலைவிதி....
கனவு கண்டேன்
நானிருந்த விடுதியைச் சுற்றி
எருமைகள் குவிந்து ஆர்ப்பாட்டம் செய்தன.
வெண்நரை சூடிய தோடர் தலைவர்
என் முன்பாக.
"எனது மலைகளின் காவல் தெய்வமாம்
புனிதம் நிறைந்த மரம் செடி கொடிகள்
எங்கே" என்று என்னை அதட்டினார்.
"யாரடா இந்தத் தேயிலை என்கிற
மலை விழுங்கியைக் கொண்டு வந்தது?"
என் மீது பாய்ந்தார்.

"மைசூர் பாடகர் தொடங்கி
ஈழத்து மலைகளின் மக்கள் வரைக்கும்
புகலிடம் தந்தோம்.
எங்கே எங்கே எமது உயிர் நிலை?"
முதியவர் எனது தோல்களைப் பற்றினார்,
அச்சமாய் இருந்தது.

ஐயா ஐயா ஆளை விடுங்கள்
பிற தேசம் நான்.
மெல்ல நசிந்தேன்.
"நட்சத்திர உலகினால் வந்த கவிஞனோ?"
ஏளனச்சிரிப்பு.
"எங்கே எமது காடுகள் விலங்குகள்?"
மீண்டும் அதட்டல்.
"அழித்தனரையா ஆனால் ஆனால்
ஆனால் என்ன...."
"அழித்ததற்குப்பிராயச்சித்தமாய்
அல்ப்ஸ் மலைக்காட்டு மரங்களின் விதைகளை
கொண்டு வந்துள்ளனர்..."

"பாலை வனத்தின் பருத்தியை அழித்து
பிராயச்சித்தமாய்
கம்பளி ஆடுகள் பரிசளித்தீரோ?
நன்று நன்று...."
தோடர் தலைவர் சீறி விழுந்தார்
எருமைகள் என் மீது எகிறி விழுந்தன.
மனம் துணுக்குற்று விழித்துக் கொண்டேன்.

7.

மலை முகடுகளில்
பள்ளத்தாக்கில்
தென்றலைப் போல் சுற்றி வந்தேன் நான்.
காடுகள் இன்னமும் மீந்திருக்கின்ற
மலைகளில் மட்டுமே
வரட்சியை மீறிய உயிர்த்துடிப்பு.
ஏனைய இடமெல்லாம்
கோடைச்சூரியன் மிதித்த சுவடுகள்
செம்மண் ரத்தம் எங்கும் சிந்த
முதுகில் குத்தி வீழ்த்தப்பட்ட
வீரனாய்க்கிடந்த நீல மலையில்
அசுரர்கள் நின்றனர்.
"நீல மலையின் கொத்துக்கள் யாவும்
அரிப்புண்டு போயினும்
மேலும் ஒரு கிலோ தேயிலை" என்கிற
கோசங்களோடு.

பஸ் ஒரு காலையில் மலை இறங்கியது.
பனிமுக்காடுகள் நீக்கி
"போய்வா அன்பே" என்றது நீலம்.
சாம்பிராணி மரங்களுள் கையை அசைத்தும்
காட்டினுள் ஓடியும்
மலைகளுள் மறைந்தும்
சூரியச்சிறுவன்
கண்ணா மூச்சி ஆடவா என்பான்.

உண்ணிப் பூஞ்செடியோ, மலை இளவரசி
புல் பூண்டுகளோ அவளது தோழியர்.
செம்மண் வடியும் மலைப்புண்களுக்கு
ஔடதமாக அவர்கள் முயன்றனர்.
இயலுமா உங்களால்
அனுமதிப்பாரோ அசுரர்கள் இதனை.

முன்பு வெள்ளை அசுரர்கள் தமது
குதிரை உரப்பிய தெருக்கலில் எல்லாம்
ஜீப் வண்டிகளில் கறுப்பு அசுரர்கள்.

இறுதியாக மலைக்காடு கழிகையில்
பஸ் வண்டிக்குள் சலசலப்பெ எழுந்தது
தொலை தூரத்தில் தென்னையும் அழுகும்,
வீதிமருங்கில்
தலையில் மண் வாரிக் கொட்டுமோர் யானை.

-ஒரு அகதியின் பாடல்-



## ஆண் குருடு

சூரியன் அன்று பெண்ணாய் இருந்தது.
அழகின் சுவாலையை ரவிக்கையுள் முடிந்து
கண்களில் தீ நாக்குகள் சுழல,
போர்ப் பேய்களின் தீவில்
கிழக்குக்கரையும் மேற்குக்கரையுமாய் திரிகிற
சூரியப் பெண்ணைக் கண்டு
உலகம் மாறிவிட்டதை உணர்ந்தேன்.


நில்லடி திடந்தோழி
ஆறுக உன் ஏறுநடை
ஒரு மென்மலர்க் கவிஞன் நான்
உன் பார்வையின் தீயைத் தணி
நிலம் நோக்காமல்
உன் கண்களை நோக்கிப் பேச விரும்பினேன்.

எக்காலத்திலும் நான் கண்டதில்லை சூரியப்
பெண்ணை
என்கிற போதேன் ஏளனச்சிரிப்பு
"உலகம் இப்படியேதான் இருக்கிறது கவிஞனே
நீதான் மாறிவிட்டாய்
என்றும் இருந்தனர் சூரியப் பெண்கள்
அன்றுன் கண்களில் ஆண்குருடு"
என்றேன் நகைக் கிறாய்
எனது மண்ணையும் விண்ணையும் உதைத்தது
மின்னல்.

எனது காலத்து பெண்சூரியர்களே
மன்னித்துக் கொள்ளுங்கள்
ஆண்குருடனாய் இருந்தேன்
பஞ்சகல்யாணிகள் மேய்கிற வெளியில்
கழுதையாய் இருந்து வாழ்வைத் தொலைத்தேன்
மனிதரின் ஒரு வழிப்பாதையில்
நெடுந்தூரம் வந்து விட்டேன் இப்படியே....
எல்லாவற்றிலும் பாதியை இழந்து போன
கவிஞன் நான்
என்றாலும் சிரிக்காதே.

திருமணம் வரைக்கும் தம்முடை மனைவியர்
குளிர்ப்பதனப் பெட்டியுள் உறைந்திருந்ததாக
நம்ப விரும்புவோர் தேசத்தில்
எனையேன் நகைக்கிறாய் ?

-மூன்றாவது மனிதன்-1996




கொடூரமும் அவலமும் மலிந்து விட்ட சூழலில்
வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மிடையே -
நம்பிக்கை தரும் உண்மை மனிதனின் பிரதிநிதி.

“ஒரு எழுத்தாளன் என்பவன் ஒரு சமூகத்தின்
கண்ணும் காதும் மனச்சாட்சியுமாவான்”
என்பதை ஜெயபாலனின் எழுத்துக்கள் நமக்கு
நிரூபிப்பவை.

வாழ்வின் மீதான காதலை, வாழ்வின்
அழகியலை தனது கவிதையின் ஊடே கருக்கட்ட
வைத்து - மலரச்செய்யும் ஜெயபாலன் தனது
வாழ்வின் பெரும் பகுதியை அடக்கப்பட்ட தமிழ்,
முஸ்லிம், மலையக மக்களின்
விமோசனத்திற்காக எழுதியும் வாழ்ந்தும்
கழித்தவர்.

தனது உயிருக்கு நேரே மரணத்தின் துப்பாக்கி
நீட்டப்பட்டு கொண்டிருக்கும் போதும்
அடக்கப்பட்ட மக்களின் பேரில்,
அம்மக்களுக்காக, வஞ்சிக்கப்பட்டவர்களுக்காக
நேற்றும் இன்றும், தனது மரணம் வரையிலும்
போராட நெஞ்சுரம் கொண்டவர் என்பதுதான்
ஜெயபாலனுடனான எனது நட்பில் நான் கண்ட
உண்மை.

ஜெயபாலனுடைய கவிதை,
அடக்கப்பட்ட மக்களின் குரல். வஞ்சிக்கப்பட்ட
மக்களின் கண்ணீர். காதலின் வசீகரப்புன்னகை.
நியாயம், நீதி வழங்கக் கோரும் சத்தியத்தின்
பிரகடனம்.

பதிப்பாளர்
எம். பௌசர்.